[1993 ஏப்ரல் 15

354—

உணவுப்பொருட்கள் பங்கீட்டுக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசி.

*9914—திரு. டி. சுதர்சனம் :

திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவுத்துறை பங்கீட்டுக் கடைகளில் உணவு அட்டை ஒன்றிற்கு 20 கிலோ அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது பிரதி மாதம் வயது வந்தவர்களுக்கு 4 கிலோ, குழந்தைகளுக்கு தலா 2 கிலோ என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 12 கிலோவுக்கு மிகாமல் அரிசி வழங்கப்படுகிறது. இன்னும் அதிகப்படியாக அரிசி வழங்குவது என்பது அரிசியின் கையிருப்பு மற்றும் நிதி நிலைமையைப் பொறுத்து அமையும். தற்சமயம் அதிகப்படியாக அரிசி வழங்கக் கூடிய நிலை இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ரேஷன் கார்டு இல்லாதவர்கள் வீடுகளே இல்லை. வசதி படைத்தவர்கள் எல்லோரும் ரேஷன் கார்டுகள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பாஸ் போர்ட் எடுக்க வேண்டுமென்றாலும், நீதிமன்றங்களில் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றாலும், லைசென்ஸ் எடுக்க வேண்டுமென்றாலும், எல்லோருமே இப்போது ரேஷன் கார்டு வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அத்தனை பேரும் இப்போது ரேஷன் கார்டு—வசதி இருப்பவர்கள், வசதி இல்லாதவர்கள் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் ரேஷன் கார்டிலே அரிசி வாங்குகிறார்கள். ஆனால் வசதியுள்ளவர்கள் அரிசி வாங்குவது கிடையாது. அவர்களுடைய அரிசியைக் குறைத்து .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜு : அந்தக் கேள்விக்குத் தான் வருகிறேன். வசதி உள்ளவர்கள் அரிசி வாங்காமல் இருக்கிற காரணத்தால் அவர்களுடைய அரிசியை மட்டும் குறைத்து, 12 கிலோவுக்கு மேல் அதிகமாக ஏழைகளுக்கு வழங்கப்படுமா ? அப்படி அது சரியில்லை என்றாலும் கூட, மற்ற தானியங்களையாவது, அதாவது கோதுமை அல்லது மற்ற தானியங்களையாவது—

1993 ஏப்ரல் 15]

ஏனென்றால் ஒவ்வொரு குடும்பத்தில் 12 பேர், 16 பேர் என்று இருக்கிறார்கள். மாதம் 12 கிலோ அரிசி என்றால் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை, ஆகவே, மற்ற தானியங்களாவது— கூடுதலாக வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குடும்ப அட்டைக்கு நாம் கொடுக்கிற இந்த 12 கிலோவிலேயே ஆண்டு ஒன்றுக்கு 470 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் நமக்கு தேவைப் படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான 20 கிலோ கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டால் ஏறத் தாழ 750 கோடி ரூபாய் மானியம் தேவைப்படும். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்து அது சரியல்ல. அளவைப் பொறுத்தவரையில் ஒரு கிலோ அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் டன் அரிசியும், சுமார் 40 கோடி ரூபாய் மானியமும் தேவைப்படும். ஆகவே தான் அவ்வளவு சுலபமாக இதை ஏற்றுக் கொடுப்பதற்கு முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் விளைச்சல் குறைவாக இருந்த காலக் கட்டத்தில் கூட, முந்தைய ஆட்சியில் ஒரு ரேஷன் கார்டுக்கு 20 கிலோ அரிசி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் எதிர்பார்க்காத அளவுக்கு நெல் விளைச்சல் அதிகமாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஏழை மக்களுக்கு 20 கிலோ கொடுப்பதற்கு பரிசிலனை செய்து மீண்டும் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 12 கிலோ கொடுப் பதற்கு நமக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 15 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. இதிலே பாதி மைய அரசிலிருந்து நாம் பெறுகிறோம். விலைக்கு வாங்குகிறோம். மீதியை கொள்முதல் மூலமாகப் பெறுகிறோம். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொன்னதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி வந்த பின்னால் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும், வருண பகவானே நம் பக்கம் சேர்ந்தத னுடைய விளைவாக நல்ல மழை பெய்து, வழக்கமாக வருகிற எட்டு லட்சம் டன் அரிசியை விட இந்த ஆண்டு 3 அல்லது 4 லட்சம் டன் அரிசி அதிகமாக வந்திருக்கிறது. ஆனாலும் 20 கிலோ கொடுப்பதற்கு இது போதாது. இதைத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். 25 லட்சம் டன் அரிசி தேவைப்படும். மொ த்தமாக 20 கிலோ, குடும்ப

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அட்டைக்குக் கொடுப்பதாக இருந்தால், 110 லட்சம் கார்டுகளுக்கு 20 கிலோ கொடுக்கவேண்டுமென்று முடிவெடுத்தால், ஆண்டு ஒன்றுக்கு 25 லட்சம் டன் அரிசி நமக்கு தேவைப்படும். இப்போது நமக்குக் கிடைத்துக் கொண்டு இருப்பது 14 லட்சத்திலிருந்து 15 லட்சம்—மத்தியத் தொகுப்பிலிருந்து பெறுவதும், நம்முடைய நெல் கொள்முதல் மூலமாக கிடைப்பதும். இந்த ஆண்டு கூடுதலாக 2 அல்லது 3 லட்சம் டன் அரிசி கிடைத்திருக்கிறது. ஆகவே, 20 கிலோ கொடுப்பது என்பது இப்போது இருக்கின்ற கையிருப்பை வைத்து முடியாது என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஏழைகளுக்கு மட்டும் கொடுப்பது என்று சொல்லி, கார்டுகளினுடைய எண்ணிக்கையைக் குறைத்து விடுவோமானால் இதிலே சாத்தியம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு ரேஷன் கடைகளுக்கும் கார்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தான் அரிசி வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஆயிரம் கார்டுகள் இருந்தால், 12 ஆயிரம் கிலோ அரிசி வழங்கப்படும் சூழ்நிலையில், மிக வசதி படைத்தவர்களும், சாதாரணமாக ஓரளவிற்கு வசதி படைத்தவர்களும் அரிசி வாங்காத சூழ்நிலையில், ரேஷன் கடைகளிலே இருக்கின்ற ஊழியர்களே கடத்திக் கொண்டு வருகின்ற சூழ்நிலை நடந்து கொண்டிருக்கிறது. இதை உடனடியாக நீக்கும் வண்ணம் வாங்காதவர்களுடைய கார்டுகளில் அரசாங்கமே ஒரு முத்திரையிட்டு அதைத் தடுத்து, அந்தக் கார்டுகளின் மூலமாக மிச்சப்பட்ட அரிசியை ஏழைகளுக்கு 20 கிலோ என்று அதிகமாக வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மட்டும் அல்லாமல் இந்தியா பூராவும் இருக்கின்ற பிரச்சினை இது. ஏழைகளுக்கு மட்டும் கொடுப்பதாக இருந்தால், இருக்கின்ற தானியங்களை இன்னும் அதிகமாகக் கொடுக்க முடியும். இந்திய அளவிலே ஒரு கோடியே 80 லட்சம் டன் ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கிறது. அதில் 30 சதவீதம் பேர்கள்தான் people living below the poverty line என்று குறிப்பிட்டு இருக்கிறோம். அப்படிக் கொடுத்தால், 20 கிலோவை அதிகமாகக் கூட கொடுக்க முடியும். தமிழ்நாட்டிலே இன்றைக்கு எல்லோருக்கும் கொடுக்காமல், 30 சதவீதம் அல்லது 35 சதவீதம் பேர்களுக்கு மட்டும் கொடுப்போம் என்று சொன்னால், அதிகமாகக் கொடுக்க

1993, ஏப்ரல் 15]

முடியும். அப்படிக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி அறிவதற்காகத் தான் இன்றைக்கு இந்திய அளவிலே, ஒரு குழுவை—என்னுடைய, தமிழ்நாடு உணவு அமைச்சருடைய தலைமையிலே—மத்திய அரசு அமைத்திருக்கிறது. அதுபற்றிய கருத்துக்களை இப்போது மாநிலங்களிடத்திலிருந்தும், அரசியல் கட்சிகளிடத்திலிருந்தும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது முடிந்த பின்பு, ஒரு முடிவு எடுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வசதியானவர்கள் வாங்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை யாரும் எழுதிக் கொடுக்க முன்வரவில்லை. எங்களுக்கு அரிசி வேண்டாம் என்று எழுதிக் கொடுப்பதற்கு பல பேர்கள் முன்வரவில்லை. அவர்கள் உபயோகிக்கவில்லை என்று சொன்னால், வேறு யாருக்காவது, அந்த வீட்டிலே வேலை செய்பவர்கள் யாருக்காவது அதைக் கொடுத்து விடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 355, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

355—

வனப்பொருட்களை கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனை செய்தல்

* 10036—செல்வி எல். சுலோசனா:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்கள் மற்றும் ஆதிவாசிகள் மலைப் பகுதிகளிலே சேகரிக்கின்ற வனப்பொருட்களை கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போது மலை வாழ் மக்கள் மற்றும் ஆதிவாசிகள் மலைப்பகுதிகளில் சேகரிக்கின்ற வனப் பொருட்கள் பெரும் பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விற்பனை செய்யப்படுகின்றன.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், மலைவாழ் பெண்களுக்கு வனப் பொருட்களை